# ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 21.11.2019 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 21.11.2019

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**<u>பொருள் : 1</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த மூன்றாண்டு தமிழக அரசின் திட்டப்பணிகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.183/செமதொ/2019 நாள்.11.07.2019 மற்றும் 15.07.2019–ன் பேரில் கீழ்க்காணும் 10/2019 மாத இதழ்களில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனங்கள் மூலம் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நாளிதழ் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | தமிழ் முரசு (தீபாவளி சிறப்பு மலர்) | 18,900/– |
| 2 | மாலை மலர் (தீபாவளி மலர்)) | 9,870/– |
| 3 | தின பூமி (தொழில் மலர்) | 21,000/– |
| 4 | நீதி வலை (மாத இதழ்) | 9,800/– |

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 284</u>**

**<u>பொருள் : 2</u>**

அரசாணை எண். (MS) 150, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA.IV) துறை, நாள்.19.11.2019–ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.40032/2012/ஆர்1, நாள்.20.11.2019–ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் படியும், அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.26.07.2018–ன் படி, 01.04.2018–ம் தேதி முதல் சொத்துவரி பொது சீராய்வு (Revision of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்து வரி உயர்வினையும், சொத்து வரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonal Rate's) 01.04.2018 முதல் உயர்த்தப்பட்டதையும் மற்றும் 2017–2018 முதல் சொத்து வரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்க தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 285</u>**

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2018—2019—ன் கீழ் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் ரூ. 1500.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்.44 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ2) நாள்.24.02.2016—ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 12981/2018/இ3 நாள். 17.07.2018—ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண். 20308/2018/டி.ஓ2 நாள். 23.08.2018—ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 27.09.2018—ம் நாள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக பிரைட் அட்வர்டைசிங் விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், மக்கள் குரல் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 02.09.2018—ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.86,624/— மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை பிரைட் அட்வர்டைசிங் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தெரிகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் — 286**

**பொருள் : 4**

இந்நகராட்சி பகுதி திண்டுக்கல் பழனி சாலையில் பிரிந்து செல்லும் நாகணம்பட்டி பைப்பாஸ் சாலையில் சாலையின் இருபுறமும் பள்ளமாக உள்ளதால் வாகனம் இறங்கி ஏறி செல்லுகிறது. ஆகவே சாலையின் இருபுறமும் கிணற்று கிராவல் அடித்து நிரப்பி கொடுக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.20000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, ஒப்படைப்பு பணியாக திரு.ஆர்.அய்யாவு ஒப்பந்ததாரர் மூலம் மதிப்பீட்டு ரேட்டிற்கு பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் — 287**

**பொருள் : 5**

இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் உட்புறம் தெற்கு மேற்கு பகுதியில் உள்ள இலவச சிறுநீர் கழிப்பிடம் இரவு நேரங்களில் மேற்படி பகுதியில் பொதுமக்கள் நடமாட்டம் இல்லாததால் தடுப்பு சுவர் உள்ளதால் சமூக விரோத செயல்கள் நடைபெறுவதாக அப்பகுதியில் பொதுமக்கள் தெரிவிக்கின்றார்கள். ஆகையால், மேற்படி இலவச சிறுநீர் கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்திவிட்டு வடமேற்கு பகுதியில் பொதுமக்கள் திறந்தவெளியில் சிறுநீர் கழிக்கும் இடத்தில் மறைவாக இலவச சிறுநீர் கழிப்பிடம் கட்ட தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் — 288**

**பொருள் : 6**

இந்நகராட்சியில் உள்ள 18 வார்டுகளில் குடிநீர் விநியோகம் செய்யப்படும் குடிநீர் விநியோக மெயின் மற்றும் பிரதான மெயின்லைனில் ஏற்படும் குடிநீர் கசிவை சரிசெய்ய நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் கசிவை உடனுக்குடன் சரி செய்யும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்புந்தப்புள்ளி கோர அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 289**

**பொருள் : 7**

இந்நகராட்சி பகுதியில் IUDM திட்டத்தின் கீழ் புதிய குடிநீர் இணைப்பு அனைத்து வீடுகளுக்கும் வழங்க பணி நடைபெற்று வருகிறது. நகரில் உள்ள 18 வார்டுகளில் விடுப்பட்ட பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு புதிய இணைப்பு வழங்க குடிநீர் விநியோக மெயின் குழாய் இல்லாத பகுதியில் குடிநீர் குழாய் பதிக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்புந்தப்புள்ளி கோர அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 290**

**பொருள் : 8**

இந்நகராட்சி பகுதியில் உள்ள 18 வார்டுகளில் உள்ள 169 ஆழ்துளை கிணறு மற்றும் திறந்தவெளி கிணறுகளில் உள்ள மோட்டார்க்களை பழுது பார்க்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்புந்தப்புள்ளி கோர அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 291**

**<u>பொருள் : 9</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் உள்ள 10 வது வார்டு தாராபுரம் சாலை கிழக்கு இராஜா ஸ்டோர் முதல் முருகேசன் வீடு வரை மற்றும் தாராபுரம் சாலை பிரபாகரன் மில் தெற்கு பகுதி முதலான தெருக்களில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்புந்தப்புள்ளி கோரவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 292</u>**

**<u>பொருள் : 10</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் வழிகாட்டுதலின்படி, பொது சுகாதாரம் டெங்கு காய்ச்சல் தடுப்பு பணிக்கு ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாளர் செயல்முறை உத்திரவின்படி, 30.11.2019 உடன் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிக்கு உரிய களப்பணியாளர்களுக்கான ஒப்பந்த காலம் முடிவுற்றதால், 01.12.2019 மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி புதிய நடைமுறை மேற்கொள்ளவோ அல்லது பழைய ஒப்பந்ததாரர் தற்போது தனியார் மயமாக்கல் ஒப்பந்த பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் பட்டியல் கடிதம் ந.க.எண்.9693/2018/எப்5, நாள்.30.05.2018–ன்படி, அதே ஊதியம் வழங்க ரூ.296/– ஒரு நாள் ஒரு நபருக்கு கூடுதலாக பணியாள வருங்கால வைப்பு நிதியின் நிர்வாக பங்கு தொகை மற்றும் ஒப்பந்தாரருக்கு வழங்க நிர்வாக கட்டணம் 22.85 சதவீதம் என (ரூ.296 + 22.85 சதவீதம்) மொத்தம் ரூ.364/– ஒரு நாள் ஒரு நபருக்கு என்ற வீதத்தில் பெற்றுக்கொள்ள ஒப்பந்ததாரர் இசைவு தெரிவித்ததை முன்னிட்டு, பரிசீலனை செய்து மீண்டும் 01.12.2019 முதல் 30.11.2020 முடிய ஓராண்டுக்கு கூடுதல் கால நீட்டிப்பு செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50.00 இலட்சம் தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் பொது மக்களின் நலன் மற்றும் அவசர அவசியம் கருதி, 2018–ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களின் கடித ந.க.எண்.9693/2018/எப்5, நாள்.30.05.2018ன்படி, ஏற்கனவே வழங்கப்பட்ட தினக்கூலி பட்டியலின்படி, ஒரு நாள் ஒரு நபருக்கு என்பதால் மேற்படி ரூ.364/–க்கு ஒப்பந்ததாரர் சம்மதித்தால் நிர்வாக நிதிநிலையை கருத்தில் கொண்டு பரிசீலனை செய்து உத்திரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.922/2018/ச்1)

**<u>தீர்மானம் எண் – 293</u>**

**<u>பொருள் : 11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு உரக்கிடங்கு இல்லாதால் தினமும் சேகரம் செய்யும் குப்பையில் மக்கும் குப்பை 6 முதல் 8 டன் போக மீதமுள்ள சராசரி 10 டன் மக்காத குப்பையை முறைபடுத்த போதிய இடவசதி (உரக்கிடங்கு) இல்லை என்பதால் தனியாருக்கு சொந்தமான பட்டா இடத்தில் கொட்டி JCB வாகனம் கொண்டு ஒழுங்கு செய்து டிப்பர் மண் ஓட்டி மூடிக்கொடுக்கவும் தொடர்ந்து பணி செய்யவும், பொது சுகாதாரப் பணி தொய்வு ஏற்படாமலிருக்க வாடகைக்கு JCB வாகனம் பயன்படுத்தவும் தேவைக்கேற்ப டிப்பர் மண் ஓட்டவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.7.00 இலட்சம் தனிஅலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
1. பொதுசுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி, பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 294</u>**

**<u>பொருள் : 12</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17 வது வார்டு சண்முகவேல்புரம் பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றில் எடுக்கும் குடிநீர் அதிக உப்பு தன்மை உள்ளதாக உள்ளது. அப்பகுதியில் தண்ணீர் பிரச்சனை அதிகமாக உள்ளதால், புதிதாக 1000 லிட்டர் சின்டெக்ஸ் அமைத்து கொடுத்து, மேற்படி கிணற்றில் இருந்து தண்ணீர் எடுக்க அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள். ஆகவே மேற்படி பணியை உடனடியாக மேற்கொள்ள ஆகும் தொகை ரூ.33,500/—ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 295</u>**

**<u>பொருள் : 13</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17 வது வார்டு சண்முகவேல்புரம், 2 வது வார்டு கே.கே.நகர் மற்றும் 5 வது வார்டு காந்தி நகர் வண்ணாம்பாறை ஆகிய மூன்று மின் மோட்டார்கள் எடுத்து உடன் பழுதுகளை சரிசெய்து இயக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.25,000/—ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 296</u>**

**பொருள் : 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 4 வது வார்டு அண்ணா நகர் மற்றும் கிறிஸ்டியன் பாலிடெக்னிக் மனைப்பிரிவு அருகில் உள்ள இரண்டு ஆழ்துளை கிணறு மின் மோட்டார் பழுதடைந்துள்ளதை சரிசெய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.32,000/—ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 297**

**பொருள் : 15**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 9 வது வார்டு தென்றல் நகர் மற்றும் 15 வது வார்டு ஆதிதிராவிடர் காலனி கழிப்பிடம் அருகில் உள்ள மின் மோட்டார்களின் பழுதுகளை சரிசெய்து இயக்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/—ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 298**

**பொருள் : 16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலக தரை தளத்தில் 4 அறைகள் கட்டப்பட்டுள்ளது. அதில் மின்சார பொருட்கள், குடிநீர் பொருட்கள், விளக்கு பரிசோதனை செய்தல் மூன்று அறைகள் போக மீதமுள்ள அறையில் ஆதார் கார்டு எடுக்கும் அறை அமைக்கவும், மேற்படி நான்கு அறைகளுக்கு மின்சார சாதனம் பொருத்தி, மின் இணைப்பு வசதி செய்யவும், நகராட்சியில் புதிதாக வாங்கப்பட்ட 21 வாகனங்களை சார்ஜ் செய்ய சார்ஜ் பிளக்கு எம்.சி.பி ஆகியவை அடைத்து மின்சார வசதி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி/விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 299**

**<u>பொருள் : 17</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் **1** முதல் **18** வார்டு பகுதிகளில் சேகாரமாகும் குப்பைகளை அகற்ற ஜெ.சி.பி வாகனம் மூலம் அப்புறபடுத்தும் பணி மேற்கொள்ள நாள்.**04.11.2019–**ல் தனி அலுவலரின் முன் அனுமதி வழங்கியதை தொடர்ந்து, **05.11.2019–**ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | வேலையின் விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | ODC எர்த் மூவர்ஸ்,<br>திரு.ஹச்.முகமது ரஸ்மி,<br>சென்போஸ்ட், ஒட்டன்சத்திரம் | JCB / per hour<br>Tipper lorry / per load | **925/–**<br>**4000/–** |
| 2 | அம்மன் எர்த் மூவர்ஸ்,<br>திரு.எஸ்.ராம்குமார்,<br>சென்போஸ்ட், ஒட்டன்சத்திரம் | JCB / per hour<br>Tipper lorry / per load | **950/–**<br>**4500/–** |
| 3 | கே.ஆர்.எர்த் மூவர்ஸ்,<br>திரு.வி.குமார்,<br>அத்திக்கோம்பை, ஒட்டன்சத்திரம் | JCB / per hour<br>Tipper lorry / per load | **1000/–**<br>**4300/–** |

மேற்காணும் **3** நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றதில் வரிசை எண்.**1–**ல் உள்ள ODC எர்த் மூவர்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதாரம் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிக்கான வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 300</u>**

**<u>பொருள் : 18</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி **1** வது வார்டு மற்றும் **6** வது வார்டு பகுதிகளில் பகிர்மான குழாய்களில் பொருத்தப்பட்டுள்ள **4** கேட்டு வால்வுகள் பழுதடைந்துலூளதை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.**1.00** இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண் – 301</u>**

**பொருள் : 19**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 17 வது வார்டு எரிவாயு தகனமேடை பகுதியில் உள்ள மினி பவர் பம்ப் மற்றும் மின் விளக்குகள் பழுதடைந்துலூளதை சரி செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.0.70 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 302**

## ஒட்டன்சத்திரம் நகராட்சி

மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள். 29.11.2019 (வெள்ளிக் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

நகராட்சி அலுவலகம்
நாள்: 29.11.2019

தனி அலுவலர் மற்றும்
ஆணையாளர்
ஒட்டன்சத்திரம் நகராட்சி

**பொருள் : 1**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிக்கு 37 களப்பணியாகளர்கள் கொண்டு கொசு புழு தடுப்பு நடவடிக்கைக்கு 1 எண்ணம் Fortable Fogging Machine (Hand Fogg Machine) கொண்டு புகை தெளிப்பு செய்யப்பட்டு வருகிறது. முதிர்கொசுக்களை கட்டுப்படுத்த 1 இயந்திரம் கொண்டு புகை தெளிப்பு செய்ய சிரமமாக உள்ளதால், அவ்வப்போது D.D.அலுவலகத்தில் பெரிய இயந்திரம் வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. சமயத்தில் இயந்திரம் கிடைக்காத போது பணியில் தொய்வு ஏற்படுகிறது. எனவே 1 எண்ணம் Vehicle Mount Fogging Machine வாங்கி பயன்படுத்த ஏதுவாக உத்தேச செலவினத் தொகை ரூ.7.50 இலட்ம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

3. அனுமதிக்கலாம் .
4. பொதுசுகாதாரம் டெங்கு தடுப்பு நடவடிக்கை பொதுமக்களின் நலன் கருதி, இயந்திரம் வாங்கிக்கொள்ள தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி செய்யவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 303**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2019–2020–ம் ஆண்டிற்கான பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான 25 சதவிகித குளோரின் கொண்ட கிருமி நாசினி 5 மெட்ரிக் டன் பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்யப்பட்டு தற்போதைய நிலையில் கையிருப்பின் அளவு குறைவாக உள்ளதால், பேருந்துநிலையம், சந்தை மற்றும் கொசு தடுப்பு நடவடிக்கை பணி சமுதாய கழிப்பிடங்களுக்கு பயன்படுத்த ஏதுவாக கூடுதலாக 4 மெட்ரிக் டன் பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.3.00 இலட்சம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் பொதுசுகாதார நலனின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, உள்ளூர் நிறுவனத்தில் விலைப்புள்ளி கோரி விநியோக மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 304**

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கட்டிடம் மேல் தளத்தில் ராஜ் அட்வடைசிங் கோவை நிறுவனத்தாற் விளம்பர பலகைகள் நிறுவி கொள்ளவும் பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதோடு மின்விளக்கு, சுவர்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் பயணிகளுக்கான இருக்கை வசதிகள் முதலான பணிகள் தங்கள் நிறுவன மூலம் மேற்கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனம் பேருந்து நிலையத்தில் விளம்பர பலகை அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. பொது மக்களின் நலன்கருதியும், சட்ட விதிகளுக்குட்பட்டும் நகராட்சியால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கலாம்.
2. விளம்பர விதிகள் 2003–ன்படி விளம்பர பலகைகள் நிறுவ அனுமதிக்காக மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல் அவர்களுக்கு அனுப்ப அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 305**

**பொருள் : 4**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2019–20–ம் ஆண்டிற்கு பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் பயன்பாடு முதலான 2 வாகனங்களுக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள நாள்.27.11.2019–ல் நேரடி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற நிறுவனங்கள் கீழ்க்கண்டவாறு,

| Sl.No | Vehicle Details | Mettupalayam Auto Service Centre, Raja Nagar, Poyampalayam pirivu south, P.N.Road, Thirupur-641602 | Best Motors Works, 1-4-1, Narippalayam Road, Odanthurai, Mettupalayam-641301 |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | TN 57 AW 2529 (Eicher Compactor) | 2,24,650/- | 2,41,880/- |
| 2 | TN 57 R 4390 (Water Tanker Lorry) | 1,12,600/- | 1,28,150/- |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு நிறுவனங்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி பணிக்கு Mettupalayam Auto Service Centre, Thirupur என்ற நிறுவனம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
1. பொதுசுகாதார பணியின் அவசியம் கருதி மதிப்பீட்டு விலையில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Mettupalayam Auto Service Centre, Thirupur என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலைவிகித்தை ஏற்று அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 306**

**பொருள் : 5**

மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.20081/2019/ஆ5 நாள்.29.10.2019–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபர்ந்தனைகளுக்குட்பட்டு அரசாணை எண். 72, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (நிலை 1) நாள்.30.04.2015–ன் வழிகாட்டுதலின் படியும் அரசிதழ் வெளியீடு நாள்.30.04.2015–ன்படி நகராட்சி பகுதிகளில் விவசாயம்,உணவு விடுதி, தொழிற்சாலை, வணிகம், நீர் பாசனம், தோட்டம், குடியிருப்பு மற்றும் பிற காரணங்களுக்காக கிணறு மற்றும் ஆழ்துளை கிணறு தோண்டுவதற்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகள் ஒழுங்குப்படுத்துதல் தொடர்பாக விதிகள் 2015 1–ல் துணை விதி 2 உள்ளவாறு பாதுகாப்பு முன்னேற்பாடுகள் குறித்து தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதலின்படியும் நகராட்சி பகுதிகளில் கிணறு / ஆழ்துளை கிணறு தோண்டுவதற்கு அனுமதி கட்டண தொகை ரூ.100/– மட்டும் வரவாக்கி அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. புதிய குடியிருப்பு கட்டிட அனுமதி கட்டணங்களில் ஆழ்துளை கிணறுக்கான கட்டணங்கள் வரவாக்கப்படும் நிலையில் அரசாணை மற்றும் விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு உரிய கட்டணம் வசூலித்து அனுமதி வழங்க அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 307**

**பொருள் : 6**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2019–2020–ம் ஆண்டிற்கான பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான 25 சதவிகித குளோரின் கொண்ட கிருமி நாசினி 5 மெட்ரிக் டன் பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்யப்பட்டு தற்போதைய நிலையில் கையிருப்பின் அளவு குறைவாக உள்ளதால், பேருந்துநிலையம், சந்தை மற்றும் கொசு தடுப்பு நடவடிக்கை பணி சமுதாய கழிப்பிடங்களுக்கு பயன்படுத்த ஏதுவாக, கூடுதலாக 4 மெட்ரிக் டன் 33 சதவிகிதம் கொண்ட பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்யும் பணி மேற்கொள்ள நாள்.15.11.2019–ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, 25.11.2019–ம் நாளில் வரப்பெற்ற விலைப்புள்ளிப்புள்ளிகளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு,

| வ. எண் | விபரம் | பாரத் மார்க்கெட்டிங் என்டர்பிரைசஸ், தஞ்சாவூர். ரூ. | வேல் குரூப்ஸ், சென்னை. ரூ. | ஜெய் ஏஜென்ஸிஸ், திருச்சி. ரூ. |
|---|---|---|---|---|
| 1 | பிளீச்சிங் பவுடர் (33 சதவீதம்) 25 கிலோ மூடை 1–க்கு | 1664/– | 1758/– | 1723/– |

மேற்காணும் 3 நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றதில் கலம் எண்.1–ல் உள்ள பாரத் மார்க்கெட்டிங், என்டர்பிரைசஸ், தஞ்சாவூர் நிறுவனம் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ளதை தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

3. அனுமதிக்கலாம்.
4. பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணிக்கான வினியோக உத்தரவு வழங்க மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 308**

**பொருள் : 7**

ஒட்டன்சத்திரம் நகராட்சி தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–2020–ன் கீழ் 1 முதல் 18 வார்டு பகுதிகளில் ரூ.300.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள அரசாணை எண்.290 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.ஏ3) நாள்.22.11.2010–ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 17349/2019/இ3 நாள். 16.10.2019–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களால் ந.க.எண். 25039–7/2019/டி.ஓ2 நாள். 18.10.2019–ல் தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 21.11.2019–ம் நாள் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் வாயிலாக அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸிஸ் விளம்பர நிறுவனம், சென்னை மூலம் மாநில அளவிலான அரசு ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், மக்கள் குரல் மற்றும் தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் தினசரி நாளிதழ்களில் மாநில அளவில் 24.10.2019–ம் நாள் வெளியீடு செய்தமைக்கான பட்டியல் தொகை ரூ.86,625/– மட்டும் வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை சென்னை அக்கார்ட் அட்வர்டைசிங் ஏஜென்ஸிஸ் விளம்பர நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணிகளுக்கான மாநில அளவிலான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்தமைக்கான பட்டியல் தொகையினை, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 309**

**பொருள் : 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–2020–ன் கீழ் ரூ.200.00 இலட்சம் மதிப்பீட்டில் சாலை, வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் தொலைபேசி செய்தி நாள். 29.10.2019 கருத்துரு மற்றும் மதிப்பீட்டு திட்ட பிரேரணைகள் வழங்க கேட்டுக்கொண்டதன்படி, மேற்படி பணிக்கு மதிப்பீடு தயார் செய்யும் பொருட்டு, கூட்டு வரைபடம், வடிகால் வரைபடம், பிரிண்டுகள் மற்றும் ஸ்பைரல் பைண்டிங் செய்த கொடுத்தமைக்கு பட்டியல் தொகை ரூ.63650/– மட்டும் வழங்க கேட்டு வரப்பெற்றுள்ளது. மேற்படி தொகையினை ஆதவா சிஸ்டம்ஸ், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கு வழங்க அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கருத்துரு அனுப்ப மேற்படி திட்டப்பணிக்கு தயார் செய்தமைக்கான பட்டியல் தொகையினை, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழங்கவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 310**

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜெனரேட்டரி பழுது காரணமாக தற்போது ஜெனரேட்டர் இயக்க முடியாமல் உள்ளது. அலுவலகத்திற்கு ஜெனரேட்டர் இயக்கத்திற்கு தேவையான 12 Valt 8 Plats பேட்டரி புதிதாக வாங்க ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.9000/– தனி அலுவலர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி அலுவலக பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஜெனரேட்டர் பேட்டரி உள்ளூர் கடைகளில் விலைப்புள்ளி கோரி வாங்கிகொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 311**

**பொருள் : 10**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஈப்பு வாகனம் TN57 AW 2867 -க்கு உண்டான டயர் ஆனது தேய்மானம் அதிகமாக உள்ளதால் புதிதாக டயர் மாற்றுவதற்கு உத்தேச செலவினம் ரூ.8000/–க்கு அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் பெற்று வாங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண் – 312**

**பொருள் : 11**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பொது சுகாதாரம் வாகனங்களான (1)TN57 AW 2867, (2)TN57AW5524, (3)TN57 R 4390, (4) TN57 R 2362 போன்ற 4 வாகனங்களுக்கு பேட்டரிகள் பழுதாகியுள்ளதால், பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளிகள் புதிய பேட்டரிகள் வாங்குவதற்கு உத்தேச மதிப்புத் தொகை ரூ.30,000/—க்கு மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கும் மன்றப்பொருள் வரைவு ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. நகராட்சி பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி, தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஜெனரேட்டர் பேட்டரி உள்ளூர் கடைகளில் விலைப்புள்ளி கோரி வாங்கிகொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 313**

**பொருள் : 12**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள வணிக வளாக கட்டிடம் மேல் தளத்தில் ராஜ் அட்வடைசிங் கோவை நிறுவனத்தாற் விளம்பர பலகைகள் நிறுவி கொள்ளவும் பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதோடு மின்விளக்கு, சுவர்களுக்கு வர்ணம் பூசுதல் மற்றும் பயணிகளுக்கான இருக்கை வசதிகள் முதலான பணிகள் தங்கள் நிறுவன மூலம் மேற்கொள்ள அனுமதி வேண்டி விண்ணப்பம் வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனம் பேருந்து நிலையத்தில் விளம்பர பலகை அமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள அனுமதி வேண்டி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொது மக்களின் நலன்கருதியும், சட்ட விதிகளுக்குட்பட்டும் நகராட்சியால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கலாம்.
2. விளம்பர விதிகள் 2003—ன்படி விளம்பர பலகைகள் நிறுவ அனுமதிக்காக மாவட்ட ஆட்சியர் திண்டுக்கல் அவர்களுக்கு அனுப்ப அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 314**

**பொருள் : 13**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 1 வது வார்டு நாகணம்பட்டி பொதுசுகாதார வளாகத்தில் பொருத்தப்பட்டிருந்த சின்டெக்ஸ் டேங்க் உடைந்ததன் காரணமாக மேற்படி கழிப்பிடத்தை பயன்படுத்த இயலாத நிலை உள்ளது. எனவே மேற்படி பொது கழிப்பிடத்தை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் புதியதாக சின்டெக்ஸ் டேங்க் பொருத்தி இதர மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ. 1.15 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் கருதி மேற்படி பணி மேற்கொள்ளவும் அதற்கான செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 315**